**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**

**அசல் வழக்கு எண் - 99/2022**

**வாதி தரப்பு சாட்சி-1 மருதை - திருமதி.எஸ்.கோமதி பெஞ்ச் கி**ளார்க் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 12.08.2025 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>:**

1) நான் வழக்கு தாக்கல் செய்துள்ள சொத்தை யாரிடம் இருந்து விலைக்கு வாங்கினேன் என்றால் பொன்னன் என்பவரிடம் இருந்து வாங்கினேன். பொன்னனிடம் இருந்து மட்டும்தான் வாங்கினேனா என்றால் வள்ளியம்மையும் கையெழுத்து போட்டுள்ளார். பொன்னனுக்கும், வள்ளியம்மைக்கும் இடையே என்ன உறவு என்றால் அண்ணன், தங்கை உறவு. நான், பொன்னன், வள்ளியம்மை மூவரும் ஒரே ஊரைச் சேர்ந்தவர்களா என்றால் ஆமாம். அவர்கள் தோட்டத்தில் குடியிருக்கிறார்கள். நான் சற்று தள்ளி குடியிருக்கிறேன். நான் எந்த வருடம் நிலத்தை கிரையம் பெற்றேன் என்றால் சுமார் 22 வருடங்கள் இருக்கும். எனது கிரைய ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன். பொன்னன், வள்ளியம்மைக்கு மேற்படி சொத்து எவ்வாறு பாத்தியம் என்றால், அவர்கள் தகப்பனார் வாங்கியது, அவர் காலத்திற்கு பின்னிட்டு இருவரும் நிலத்தை விற்றுவிட்டார்கள். நான் எத்தனை அயிட்ட சொத்தை விலைக்கு வாங்கினேன் என்றால் 2 அயிட்ட சொத்தை வாங்கினேன்.

2) மேற்படி இரண்டு அயிட்ட சொத்துக்களும் அருகருகே உள்ளதா என்றால் இரண்டு நிலங்களுக்கும் இடையே கிழமேல் பாதை உள்ளது. முதல் அயிட்ட சொத்தின் சர்வே எண் என்னவென்றால் நான் படிக்கவில்லை, எனக்கு தெரியாது. எவ்வளவு விஸ்தீரணம் என்றால் பாதைக்கு வடபுறம் 30 செண்ட், தென்புறம் 1 ஏக்கர் 10 செண்ட் ஆகும். 30 செண்டுக்கு நான்கு எல்லை விபரம் தெரியுமா என்றால் தென்புறம் பாதை, மேற்குபுறம் மகாமுனி நிலம், கிழபுறம் சாத்தவேலார் நிலம், வடபுறம் பழனிச்சாமி நிலம் உள்ளது. 1 ஏக்கர் 10 செண்ட் நிலத்திற்கு நான்கு எல்லை விபரம் தெரியுமா என்றால் வடபுறம் பாதை, கீழ்புறம் கோயில் மானிய நிலம், மேற்குபுறம் 1ம் வாதியின் நிலம், தெற்குபுறம் பொசியம்பட்டி செல்லும் ரோடு உள்ளது.

(வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது)

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/-R. தமிழரசி

**Principal District Munsif,**

**Kulithalai.**